[1982 மார்ச் 2

அரசு மருத்துவர்களுக்குத் தரப்படும் ஈட்டுப்படி.

*வினா எண். 316—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவர்களுக்குத் தரப்படும் Non-Practicing Allowance போதியதாக இல்லை என்ற கோரிக்கை அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) தற்போது நான்-பிராக்டிசிங் அலவன்ஸ் எல்லா மருத்துவர்களுக்கும் உயர்த்தி இருக்கிறோம். கூடுதலாக 50 ரூபாய் அரசு அளித்து வருகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, நான்—பிராக்டிசிங் அலவன்ஸ் கூடுதலாக 50 ரூபாய் கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது பாராட்டுதற்குரியது என்றாலும்கூட உண்மையிலேயே இந்த அலவன்ஸ் குறைவாக வாங்கக்கூடியவர்கள் கிராமப் புறங்களில் பணியாற்றுகின்ற—பிரைமரி ஹெல்த் சென்டர், அரசு டிஸ்பென்சரிஸ், இ.எஸ்.ஐ. மருத்துவ மனைகளில் பணியாற்றுகின்றவர்கள்தான் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அவர்களுக்குக் கொடுக்கப்படுவது குறைவாக இருக்கின்ற காரணத்தினால் இன்னும் சற்று உயர்த்திக் கொடுத்து அவர்களைத் திருப்திபடுத்தி மக்களுடைய வியாதிகளை நல்ல முறையிலே அவர்கள் குணப்படுத்தக்கூடிய அளவுக்கு உத்திரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது ஒரு சாராருக்கு நான்-பிராக்டிசிங் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. இ.எஸ்.ஐ., லெப்ரஸி போன்ற துறைகளில் உள்ளவர்கள் பிராக்டிஸ் செய்யக் கூடாது என்ற முறை இருக்கிறது. மொத்தமாக பிராக்டிஸ் செய்கிறவர்களுக்குக் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று தேர்ட் பே கமிஷன் சொல்லியிருக்கிறது. அதற்காக நிறையச் செலவு ஆகும். ஏற்கெனவே, இரண்டு மாநிலங்களிலே—ஒரிஸா இன்னும் ஒருமாநிலம்—தடை செய்திருக்கிறார்கள். அவர்கள் அங்கே அதை டிஸ்போஸ் செய்த பிறகு கொள்கை ரீதியாக நான்-பிராக்டிசிங் அலவன்ஸ், அரசாங்க மருத்துவ மனைகளிலே பணியாற்றுகின்றவர்கள் பிராக்டிஸ் செய்யக்கூடாது என்ற நிலைமைகளை முடிவு செய்யலாம். இண்டியன் இன்ஸ்டிட்யூட் ஆப் சயின்ஸ், டெல்லியில் கொடுக்கிறார்கள், அந்த மாதிரிச் செய்யலாமா என்று நாம் ஆராயலாம்.

1982 மார்ச் 2]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: இது ஒரு பெரிய பிரச்சினை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். லெப்ரஸி, டி.பி. துறைகளிலே பணியாற்றக் கூடியவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் மாதிரியாகக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: ரிஸ்க் அலவன்ஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். லெப்ரஸியிலே பணியாற்றுகின்றவர்களுக்கு 200 ரூபாய் ரிஸ்க் அலவன்ஸ் ப்ளஸ் நான்-பிராக்டிசிங் அலவன்ஸ் கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்த நான்-பிராக்டிசிங் அலவன்ஸ் அதிகமாக டாக்டர்களுக்கு நிர்ணயம் செய்ய வேண்டுமென்பதினுடைய நோக்கத்தை அரசு எப்படிப் புரிந்திருக்கிறது, என்ன செய்யப் போகிறது என்பதற்குத் திட்டவட்டமான பதில் வேண்டுமென்பதற்காகத்தான் நான் இதைக் கேட்கிறேன். இதுபற்றி நான் முன்பே சொல்லியிருக்கிறேன். அரசு மருத்துவ மனைகளிலே வேலை செய்கின்ற டாக்டர்கள் முழு நேரமும் தங்களுடைய உழைப்பைக் கொடுக்கின்ற முறையில் தனியார் மருத்துவ மனைகளுக்குச் சென்று தங்களுக்கு வருவாய் அதிகப்படுத்திக் கொள்ளக்கூடிய முயற்சியிலே ஈடுபடாமல் தடுப்பதற்கும் அவர்கள் தனியார் துறைக்குப் போகக் கூடாது முழு நேரத்தையும் அரசுக்கே சேவை செய்வதில் செலவிட வேண்டுமென்பதற்கும் இன்றைக்கு அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளம் குறைவாக இருப்பதால் அந்தச் சம்பளம் போன்று நான்-பிராக்டிசிங் அலவன்ஸ் கொடுத்து அவர்கள் தனியார் துறைக்குப் போகக் கூடாது என்ற முடிவை அரசு எடுக்குமா? இது கொள்கைப் பிரச்சினையாக இருந்தாலும் கூட இதுபற்றி ஆலோசித்து அரசு முடிவு எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: கொள்கைப் பிரச்சினைக்குள்ளே நான் கேள்வி நேரத்திலே போகவில்லை. இருந்தாலும் சிக்கலைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

In this connection, it is to be stated that the Government of Utter Pradesh has issued orders banning practice by Government doctors. Some of the Government doctors have field a Writ Petition in the Allahabad High Court against the order. ஆகவே அந்த ஸ்டேஜிலே இருக்கிறது. அதற்காக நாம் காத்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய கருத்து முற்றிலும் உண்மை. அரசாங்கத் துறையிலே பணியாற்றக் கூடியவர்கள் பிரைவேட் பிராக்டிசுக்குப் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. அதற்காக சம்பளத்தை உயர்த்தி ஒட்டு மொத்தமாக கொடுப்பது என்பது கொள்கை ரீதியாக உள்ள பிரச்னை. நான்-பிராக்டிசிங் அலவன்ஸ் கொடுத்துவிட்டு பிரைவேட் பிராக்

டிஸ் பண்ணக்கூடிய நிலைமையைத் தடுக்க முடியவில்லையென்றால் நான்-பிராக்டிசிங் அலவன்ஸ் கொடுப்பதிலே பலன் இல்லாமல் போய்விடும்.

'After the High court case is disposed of' அதைப்பற்றி முடிவு எடுக்கலாம்.

திரு. இரா. சண்முகம் : தலைவர் அவர்களே, நான்-பிராக்டிசிங் அலவன்ஸ் கொடுத்தும் தனியாக மருத்துவம் செய்கிறவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : நான்-பிராக்டிசிங் அலவன்ஸ் கொடுக்கப்படக்கூடிய மருத்துவர்களுக்கு திட்டவட்டமாக அவர்கள் பிரைவேட் பிராக்டிஸ் செய்யக் கூடாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. என்ன பிரச்சினை என்றால் சர்கம்ஸ்டான்ஷியல் எவிடன்ஸோடு தெரிவிக்கப்படுகிறபோது நடவடிக்கை எடுக்கலாம். 2, 3 நபர்கள் மீது டிபார்ட்மெண்டல் ஆக்ஷன் எடுத்துக் கொண்டிருக்கிறோம். திட்டவட்டமாக புரூப், எந்த இடத்திலே பிராக்டிஸ் செய்கிறார் என்று கிடைத்தால் நாம் ஆக்ஷன் எடுக்க முடியும்.

(முற்பகல் 9.50)

ஆனால் டிபார்ட்மெண்டல் ஆக்ஷன் இரண்டு மூன்று நபர்களின் மீது தொடர்ந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகரில் மின்சார டிராலி பஸ்கள் விடும் திட்டம்.

*வினா எண். 317—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரத்தில் மின்சார டிராலி பஸ்கள் அறிமுகப்படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) அரசு இத்திட்டத்தினைப் பற்றி பரிசீலித்து வருகிறது.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னை நகரில் ஓடுகின்ற பேருந்துகளிலும், மின்சார இரயில்களிலும் இருக்கின்ற கூட்ட நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக இந்த டிராலி பஸ்களை பரீட்சார்த்தமாக அமல்படுத்த அரசு முடிவெடுக்குமா ? குறைந்தபட்சம் பள்ளி மாணவர்களுக்காவது இந்த டிராலி பஸ்களை அமல்படுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.